# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-4
Date : 27.08.2024
Case No. : **O.S.469/2019**
Nationality : Indian
Name : துரைராஜ்
Religion :
Father's/Husband's Name : ரத்தினம்
Age : 74
Village :
Taluk :

வா.சா.4

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விவசாய தொழில் மற்றும் பெட்டிக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் மேல அகலங்கண் கிராமத்தில் பெட்டிக்கடை வைத்துள்ளேன். பெட்டிக்கடையை எனது வீட்டு வாசலில் வைத்துள்ளேனா அல்லது தனியே வைத்துள்ளேனா என்றால் IOB வங்கி அருகே வைத்துள்ளேன். பெட்டிக்கடையில் நான் அமர்ந்து தொழில் செய்வேன் என்றால் என்னுடன் எனது மகனும் இருப்பார். மேற்படி தொழில் தவிர நில புரோக்கர் தொழிலும் செய்து வருகிறேன் என்றால் தெரிந்தவர்கள் கூப்பிட்டால் செல்வேன். கமிசன் எதுவும் வாங்க மாட்டேன். தாவா சொத்திலிருந்து எனது வீட்டிற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1 கி.மீ. தூரம் இருக்கும். நான் தாவா சொத்திற்கு வரவேண்டிய அவசியம் என்னவென்றால் எனக்கு அவசியம் எதுவும் இல்லை.

2. ராமசாமி எப்போது சொத்து வாங்கினார் என்றால் வருசம் சரியாக தெரியவில்லை. அவர் சொத்து வாங்கியபோது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். அவர் வாங்கிய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அதனால் ராமசாமி வாங்கிய சொத்து விவரம் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

ராமசாமி தாவா 1ம் இன சொத்தினை யாரிடம் இருந்து வாங்கினார் என்றால் ஒரு நாயுடுவிடம் இருந்து வாங்கினார் . அவர் பெயர் எனக்கு தெரியவில்லை. ராமசாமி சொத்தினை வாங்குவதற்கு முன்பு சர்வே செய்து அளந்து வாங்கினாரா என்றால் இல்லை. அதனால் ராமசாமி வாங்கிய ஆவணத்தில் உள்ள 1வது இன சொத்தின் விஸ்தீரணம் சரியாக உள்ளதா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. எனது ஊர் நாட்டாறுக்கு தெற்கே உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கு புறத்தில் பாலம் உள்ளது என்றால் சரிதான். பாலத்திலிருந்து வடமட்டம் செல்லும் சாலையில் எனது ஊர் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தைப் பொறுத்து எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 50 ஆண்டுகளாக தெரியும். ராமசாமி வாங்கிய 1வது இன சொத்திற்கு முன்பாக 50 வருட தென்னை மரங்கள் இருந்தது என்றால் 20 வருட தென்னை மரங்கள் இருந்தது. அதற்கு அருகில் ஒரு டெய்லர் கடை இருந்தது என்றால் சரிதான். அந்த டெய்லர் கடை கட்டுமானம் மிகவும் பழமையானது என்றால் சுமார் 20 அல்லது 25 வருடங்கள் பழமையானது.

4. மேற்படி டெய்லர் கடை இருந்த இடத்தைதான் பிரதிவாதி வாங்கி உள்ளார் என்றால் சரிதான். மேற்படி பாலத்திற்கு கிழக்கே வீடுகள் மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். நான் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடம் என்று சொல்லி உள்ளதற்கு ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி மேற்படி டெய்லர் கடை இருந்த இடத்தை கிரயம் வாங்கி அனுபவித்து வருவதால் நான் நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதி ஆககிரமித்து குடியிருந்து வருவதாக சொல்லி உள்ளது தவறு என்றால் சரியல்ல. ராமசாமி என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டுள்ளார் என்றால் வேலி தகராறுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை வழக்கறிஞர் தட்டச்சு செய்து கொடுத்தார் என்றாலும் அதில் நான் கையொப்பம் செய்தேன்

என்றாலும் சரிதான். ராமசாமி வாங்கிய 1வது இன சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா 2 வது இன சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. டெய்லர் கடை இருந்த கட்டிடம் மேற்கே ஆர்.சி.சி. கட்டிடம் என்றாலும் கிழக்கே கூரை கட்டிடம் என்றாலும் சரிதான். 2014 ம் ஆண்டு என்ன பிரச்சனை நடந்தது என்றால் ராமசாமி மகன்கள் முருகன், சின்னு (எ) ரமேஷ் ஆகியோர் வேலி தகராறு இருப்பதாக என்னை அழைத்தார்கள். நான் அப்போது எங்கே இருந்தேன் என்றால் நான் வீட்டில் இருந்தேன். என்ன தகராறு நடந்தது என்றால் சுரேஷ்குமார் வாதிகளை வேலி போடக்கூடாது என தடுத்தார். அதனால் சர்வேயர் மூலமாக அளப்பதற்கு படி கட்டி சொத்தினை அளந்தார்கள். எப்போது அளந்தார்கள் என்றால் எனக்கு தேதி சரியாக ஞாபகமில்லை.

5. பிரதிவாதி வைத்திருந்த உயிர் வேலியை ராமசாமி வகையறா அகற்றிவிட்டு காம்பவுண்டு சுவர் கட்டுவதற்கு முயற்சித்ததால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தினை அளந்தபோது உயிர் வேலி இருந்ததா என்றால் உயிர் வேலி இல்லை. தாவா சொத்தினை அளந்தபோது ராமசாமி ஆர்.சி.சி வீடு கட்டவில்லை என்றாலும் தார்சு வீடு இருந்தது என்றாலும் சரிதான். ராமசாமி வீட்டிற்கு எந்தபுறம் குப்பை இருந்தது என்றால் வடக்கு பக்கம் இருந்தது. ராமசாமி வீட்டிற்கு வடக்கே கட்டிடம் எதுவும் இல்லை என்றால் சரிதான். அங்கு தென்னை மரங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். ராமசாமி வீட்டிற்கு வடக்கே வெள்ளக்கரை உள்ளது என்றால் சரிதான். வெள்ளக்கரை பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6. காரைக்கால் ரோட்டிற்கு தெற்கே மேற்படி வெள்ளக்கரை உள்ளது என்றாலும் அதற்கு தெற்கே படுகை உள்ளது என்றாலும் காரைக்கால் ரோட்டிற்கு தெற்கே டெய்லர் வீடு உள்ளது. அதற்கு தெற்கே வெள்ளக்கரை உள்ளது அதற்கு தெற்கே படுகை உள்ளது

என்றாலும் சரிதான். தாவா 1வது இன சொத்திற்கு வடபுறம் காலி இடம் உள்ளது என்றால் முருகன் காலி இடம் உள்ளது. முருகன் பெயரில் உள்ள பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் அவருக்கு அவர் தந்தை ராமசாமி பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். எந்த வருடம் எழுதி கொடுத்தார் என்று எனக்கு தேதி ஞாபகமில்லை. ராமசாமி இறந்து சுமார் 10 ஆண்டுகள் இருக்குமா என்றால் சுமார் 5 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் எனக்கு சரியாக தெரியவில்லை.

7. ராமசாமி சொத்தை அளப்பதற்கு யார் பணம் கட்டியது என்றால் யார் பணம் கட்டியது என்று தெரியவில்லை. நில அளவையர் வந்து தாவா சொத்தை அளந்தபோது நான் இருந்தேன் என்றால் சரிதான். எப்போது அளந்தார் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை. எந்த சொத்தை சர்வேயர் அளந்தார் என்றால் தாவா 2 இன சொத்துக்களையும் அளந்தார். 1வது இன சொத்து சர்வேயர் எவ்வாறு அளந்து காட்டினார் என்று எனக்கு தெரியாது. 2 வது இன சொத்து சர்வேயர் எவ்வாறு அளந்து காட்டினார் என்று எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து 2 நபர்கள் வந்து அளந்தார்கள். நீதிமன்றத்தில் இருந்து யார் வந்தார் என்று தெரியவில்லை. அப்போது நீதிமன்ற ஆணையர் இருந்தாரா என்றால் எனக்கு தெரியவில்லை. நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர் வந்தார்களா என்றால் வந்தார்கள். நீதிமன்றத்தில் இருந்து வந்து தாவா சொத்தினை அளந்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் முருகன் எனக்கு தகவல் சொன்னார்.

8. அவ்வாறு நீதிமன்ற ஆணையர் உதவியுடன் தாவா சொத்தினை அளந்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா 1வது இன சொத்திற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். கடைசியாக எப்போது சென்றேன் என்றால் 1 மாதத்திற்கு முன்பு சென்றேன். எதற்காக சென்றேன் என்றால் சாதாரணமாக சென்றேன். ராமசாமி வீட்டிற்கு மேற்கில் உயிர் வேலி உள்ளதா என்றால்

உள்ளது. வடக்கு பக்கத்தில் உயிர் வேலி உள்ளதா என்றால் நான் உள்ளே சென்று பார்க்கவில்லை. வடக்கு பக்கத்தில் உயிர் வேலி இல்லை. குப்பைதான் உள்ளது. நீதிமன்றத்தில் இருந்து தாவா சொத்தை அளந்தபோது வேறு யார் இருந்தார் என்றால் நிறைய நபர்கள் கூட்டமாக இருந்தார்கள். தாவா சொத்தை அளந்தபோது பிரச்சனை எதுவும் ஏற்பட்டதா என்றால் இல்லை. தாவா சொத்தை அளந்துவிட்டு அனைவரும் சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான்.

9. நீதிமன்றத்தில் இருந்து வந்து தாவா சொத்தை அளந்த பிறகு தாவா சொத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. நீதிமன்றத்தில் இருந்து தாவா சொத்தினை அளந்துவிட்டு சென்ற பிறகு 22.04.2015 ம் தேதி என்ன நடந்து என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து ஒருமுறைதான் அளக்கப்பட்டது என்றால் சரிதான். 2014 ம் ஆண்டுதான் தாவா சொத்தை அளக்கப்பட்டது என்றால் தேதி எனக்கு தெரியவில்லை. டெய்லர் வீட்டிற்கு கிழக்கே தென்னை மரம் இருந்ததா என்றால் டெய்லர் வீட்டிற்கு கிழக்கே உள்ள இடத்தை பிரதிவாதி வாங்கி உள்ளார். அதில் தென்னை மரங்கள் உள்ளது. அந்த மரங்கள் நேராக உள்ள மரங்கள் என்றால் சரியல்ல. சாய்ந்த மரமும் உள்ளது. தென்னை மரம் எந்த பக்கம் சாய்ந்திருந்தது என்றால் கிழக்கு பக்கம் சாய்ந்திருந்தது.

10. அந்த மரத்தை வெட்டினார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது குறித்து எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 17.06.2017 ம் தேதி என்ன பிரச்சனை நடந்தது என்றால் எனக்கு தெரியாது. 17.03.2018 ம் தேதி என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் 2015, 2017, 2018 ஆகிய ஆண்டுகளில் நடந்தது எனக்கு தெரியாது. ராமசாமி வீட்டிற்கு நான்

எத்தனை வருடங்களாக செல்கிறேன் என்றால் சுமார் 30 வருடங்களாக சென்று வருகிறேன். எதாவது பிரச்சனை நடந்தால் ராமசாமி மகன்கள் என்னை அழைப்பார்கள் என்றால் சரிதான். அவர் வீட்டில் நடக்கும் நல்லது கெட்டதுகளுக்கு சென்று வருவேன் என்றால் சரிதான். ராமசாமி தாக்கல் செய்த வழக்கிற்கு பிரதிவாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ன விவரத்தை நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. நான் முருகனிடம் ஒரு கணிசமான தொகையை பெற்றுக்கொண்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய சொத்து மற்றும் அதற்கு தெற்கே உள்ள சொத்து பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் அதனை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா 2 வது இன சொத்தை வாங்கிய போதும் நான் இருந்தேன் என்றால் சரிதான். அந்த இடத்தை முதலில் காலி இடமாக வாங்கி பின்னர் வீடு கட்டப்பட்டது என்றால் சரிதான். அந்த இடத்தை வாங்கும்போது அளவீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த இடத்திற்கு மேற்கு பக்கமாக ஒரு கண்ணி வாய்க்கால் இருந்தது என்றால் இல்லை.

11. வடக்கில் உள்ள சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எதன் அடிப்படையில்

பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் வாதிகள் வாங்கிய இடத்தில் அவர்கள் வீடு கட்டி உள்ளார்கள். பிரதிவாதி வாங்கிய இடத்தில் அவர் வீடு கட்டி உள்ளார். வேறு எதுவும் தெரியவில்லை.

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.